# காரிய சித்தி மாலை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்தி மாலை

## விநாயகர் கவசம்

## விநாயகர் அகவல் 108 போற்றி

தொகுப்பாசிரியர்
குலபதி ஆறுமுகம் கந்தையா J.P
அவர்கள்

அகஷ்டலகஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி : 334004

விலை 20/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் விரதம்

எந்தச் செயலைச் செய்வதற்கு முன்னாலும் முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானை வணங்கியே செய்வதைப் போல விரதங்களின் தொடக்கமே விநாயக விரதமாகும்.

இந்த விரதமானது வைகாசி மாதத்தில் சுக்கிலபட்சத்து முதல் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

இவ்விதம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை விநாயகப் பெருமானை வணங்கி அவர் நினைவான மேற்கொள்ளும் விரதமே விநாயகர் விரதமாகும்.

விநாயகர் விரதத்திற்கு விநாயகர் பெருமானால் பெரிதும் விரும்பப்படுகின்ற கொழுக்கட்டை போன்ற பண்டங்களைத் தயாரித்து வைத்து வணங்கிய பின்னர் தான் இந்த விநாயகர் விரதத்தை மேற்கொள்ள வேண்டும்.

விரத நாட்களில் உணவை மிகவும் குறைந்த அளவிலேயே உண்ண வேண்டும். பொதுவாக பால் பழம் இவைகளை அருந்தி விரதம் இருப்பதே சிறந்ததாகும்.

# காரியசித்தி மாலை

**இயற்றியவர் : காசிப முனிவர்**

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்த மறைஆ கமலங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன்அந்த
உலகு முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம். 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம். 3

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 4

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன்எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 6

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம். 8

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம்மும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம் பெறும்எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும். 9

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ் ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர்மறைந்தார். 10

## பாராயண பலன்

(இவ்வெட்டுப் பாடல்களும் 'தோத்திராட்டகம்' என வழங்கப்பெறும். இவற்றை மூன்று நாட்கள் முப்பொழுதும் ஓதினோர் எல்லாப் பேறுகளையும் பெறுவர்; எட்டு நாட்கள் ஓதினோரும், சதுர்த்தியன்று எட்டுமுறை ஓதினோரும் அட்டமாசித்திகளை அடைவர்; நாள்தோறும் பத்துமுறையாக இரண்டு மாதம் ஓதினோர்க்கு அரசர் வசியமாவர்; அவ்வாறு இருபத்தொரு முறை ஓதினோர் மக்கட்பேறு, கல்வி, செல்வம் முதலிய எல்லா நலன்களையும் அடைவர்" என்று விநாயகப் பெருமான் காசிபர் முதலியோர்க்கு அருளினமை, விநாயக புராணத்துள் கூறப்பட்டது.)

# விநாயகர் கவசம்

வளர்ச்சியைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க
வாயத்த சென்னி
அளவுபடா வதிகசவுத் தரதேகம தோர்கடற்தாம்
அமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய காசிபர் காக்க
புருவந் தம்மைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள் பாலச்சந்
திரனார் காக்க
கவின்வளரும் அதரங்கச முகர்காக்க தாலங்கணைக்
கிரீடர் காக்க
நவில்சி புகம் கிரிசைசு தர்காக்க நனிவாக்கைவி
நாயகர்தாங் காக்க
அவிர்நகை துன்முகர்காக்க அள்ளெழிற் செஞ்செவி
பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி நாசியைச்
சித்திதார்த்தர் காக்க
காமரூபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க களம்
கணேசர் காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகந் தபூர்வசர் தாம்
மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாயகன் காக்க
இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க அகட்டினைத் துலங்கே
ரம்பர் காக்க
பக்க மிரண்டையுந் தராதரர் காக்கப் பிருட்டத்தைப்
பாவ நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கி லிங்கம் வியாளபூ
டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்கசக
னத்தை யல்லல்
உக்க கணபன் காக்க ஊருவை மங்கள மூர்த்தி
யுவந்து காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க விருபதமேக
தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசாதன்னர் காக்க முன்கையை
வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபூகர் காக்க விரல்பதும
வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க கிழக்கினித்
புத்தீசர் காக்க
அக்கினியிற் சித்தீசர் காக்க உமா புத்திரர்தென்
னாசை காக்க
மிக்கநிருதி யிற்கணேசுரர் காக்க விக்கினவர்த்
தனர் மேற்கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற் கசகன்னன் காக்க
திகழ்உதீசி
தக்கநிதிபன் காக்க வடகிழக்கி லீசாந்
தனரே காக்க
ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க விரவினுஞ்சந்தி
யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின் கிருது காக்க இராக்கதர்பூத
முறுவேதாள
மோகினி பேயிவையாதி யுதர்த்திறத் தால் வருந்துயரு
முடிவில்லதா
வேகமுறு பிணிபலவும் விலக்கு புபாசாங்குசர் தாம்
விரைந்து காக்க
மதிஞானம் தவம்தான மானமொளி புகழ்குலம்வண்
சரீரமுற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவான தனம்தானி யங்கிரகம் மனைவிமைந்தர்
பயினட் பாதிக்
சதியாவுங் கலத்து சர்வாயுதர் காக்க காமர் பவுத்
திரர் முன்னான
விதியாருஞ் கற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும்
விருப்பிக் காக்க
வென்ற சீவி தங்கபிலர்காக்க காரியாதி
யெலாம் விகடர் காக்க
என்றிவ்வாறிதுதனைமுக் காலமுமோ திடினும்பா
லிடையூ றென்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள் யாரொருவ
ரோதினாலு
மன்றவாங் கவாதேகம் பிணியறவச் சிரதேக
மாகி மன்னும்

*(விநாகர் கவசம் முற்றிற்று)*

கணபதி துணை

ஔவையார் அருளிச் செய்த

## விநாயகரகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந் தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்டநீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும் மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழ் ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத்தான் எழுந்து அருளி
மாயாய் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்து என் உளந்தனில்புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந் தெனக்கு அருளிக்
கேடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன்தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக்கு கருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
*அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்*
*குமுத சகாயன் குணத்தையும் கூறி*
*இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்*
*உடல் சக்கரத்தின்உறுப்பையுங் காட்டிச்*
*சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்*
*எண்முக மாக இனிது எனக்கு அருளிப்*
*புரியட்ட காயம் புலப்பட எனக்குத்*
*தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெ னக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என் தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கும் ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

விநாயகர் அகவல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்கீரதேவர் அருளியது
# விநாயகர் திருவகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மரவிய மார்பா!
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி!
சங்கர னருளிய சற்குரு விநாயக
ஏழை யடியே னிருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறுந்
திருவளர் நுதலில் திருநீற் றழகுஞ்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையுந்
நறுந்திகழ் நாசியும் நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நல்மலர் முடியும்
கவச குண்டலக் காந்தியும் விளங்கச்
சிந்துரத் திலகச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும் வீற்றிருக்க
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னா பாணமும் பொருந்து முந்நூலும்
மின்னா மெனவே விளங்கு பட்டழகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்திச் சுழியு முரோமத் தழகுந்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கை பலதெனி யார்ப்பத்
தண்டைச் சிலம்புத் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்கத்
தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகுகு திந்திமி தாள முழங்க
ஆடிய பாத மண்டர்கள் போற்ற
நாடிமெய் யடியர் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காக்ஷிதந் தருள
இருளைக் கடிந்து யெங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய்ப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் றிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை வளர்ந்த சீரடி யார்க்கு
இகபர சாதன மிரண்டு முதவி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணி பணியப் பீஜா க்ஷரமும்
ஓமென் றுதித்த ஓங்காரத் துள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமென் றெழுந்த அக்ஷர வடிவும்
இடைபிங் கலைக ளிரண்டின நடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலமுங் குறித்து
மண்டல மூன்றும் வாயுவோர் பத்துங்
குண்டலி யசபை கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையுங் காட்டி
ஆறா தார அங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்ச சக்திகளின் பாதமுங் காட்டி
நவ்வொடு மவ்வும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டல மான வெளிவையுங் காட்டி
ஐம்பத்தோ ரெழுத் தட்சர நிலையை
இன்ப சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவணை! பொற்கம லாசான்
திருவிளை யாடலுந் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போத நிறைந்த பூரணங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சி வெளிதனி லுள்ளொலி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவளம் நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகயி லாயச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையுங் காட்டித்
தத்துவந் தொண்ணூற் றாறையும் நீக்கிக்
கருவி கரணங் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயைநீக்கி
உம்பர்கள் ரிஷிகள் ஒருவருங் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டி
சத்தி பராபரை சதாநந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியவர் ஞான வமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
விண்மய மான விதத்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம்பொரு ளியாவுந்
தன்னுடை வசமாந் தவநிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவா யாட்கொண் டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிட்கள நாட்டமுந் தந்து
குருவுஞ் சீடனுங் கூடிக் கலந்து
இருவரு மொருதனி யிடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுன முத்திரையை மனத்தி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்
கண்டது மாயை கனவெனக் காட்டிப்
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச லிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்க்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி!
நித்திய பூசை நைவேத் தியமும்
பத்தியாய்க் கொடுத்துப் பரமனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்தி யனுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைத்த குளிர்பதந் தந்து
ஆசு மதுர வமிர்த மளித்துப்
பேசு ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவிலுங் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை யளித்து
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்க்கை யிடையூற கற்றிப்
புல்ல ரிடத்திற் புகுந் துழலாமல்
ஏற்ப நிகழ்ச்சி என்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன்கண் டாயே!
நல்வினை தீவினை நாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுரு தகனஞ் செய்தவன் நீயே
சத்தியும் நீயே சதாசிவம் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தியும் நீயே புராந்தகன் நீயே
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோக்ஷமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிா நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே
உன்னரு ளன்றி யுயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதன் கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேட்டுமம்
மூன்று நாடியு முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்து நானூற்று நாற்பத்தெட்டு
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளியே நித்தம்
பஞ்சா க்ஷரநிலை பாலித் தெனக்குச்
செல்வமுங் கல்வியுஞ் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயக!
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திர னேதரும் புண்ணிய முதலே
வெண்ணீ றணியும் விமலன் புதல்வா
பெண்ணா முமையாள் பெற்றிருந் தேவே
அரிதிரு மருகா அறுமுகன் றுணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே சரணம் குணமே சரணம்
பெருவயிற் றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்
மானத வாவி மலர்த்தடாகத் தருகிற்
றானத்தில் வாழுந் தற்பரா சரணம்!
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சி தானந்த சற்குரு சரணம்!
விக்கின விநாயகா தேவே ஓம்!
அரகர சண்முக பவனே ஓம்!
சிவசிவ மஹாதேவ சம்போ ஓம்!

சிவமயம்

# வேழமுகம்

## குறள் - காப்பு

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்த வரும். 1

வெற்றி முகத்து வேலவனைத் தொழப்
புத்தி மிகுத்து வரும். 2

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி யோடுந் தொடர்ந்த வினைகளே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்ப முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே. 4

## பிள்ளையார் சிந்தனை

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜெயஜெய
சீரிய ஆனைக் கன்றே ஜெயஜெய
அன்புடை அமரரைக் காப்பாய் ஜெயஜெய
ஆவித் துணையே கணபதி ஜெயஜெய
இண்டைச் சடைமுடி இறைவா ஜெயஜெய
ஈசன் தந்தருள்மகனே ஜெயஜெய
உன்னிய கருமம் முடிப்பாய் ஜெயஜெய
ஊர்நவ சந்தி உகந்தாய ஜெயஜெய
எம்பெரு மானே இறைவா ஜெயஜெய
ஏழுல குந்தொழ நின்றாய் ஜெயஜெய
ஐயா கணபதி நம்பியெ ஜெயஜெய
ஒற்றை மருப்புடை வித்தகா ஜெயஜெய
ஓங்கிய ஆனைக் கன்றே ஜெயஜெய
ஔவிய மில்லா அருளே ஜெயஜெய
அ.்.கர வத்து ஆனவா ஜெயஜெய
கணபதி என்வினை களைவாய் ஜெயஜெய
ஙப்போர் மழுவொன் றேந்தியே ஜெயஜெய
சங்கரன் மகனே சதுரா ஜெயஜெய
ஞயநம் பினர்பா லாடிய ஜெயஜெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்படு விக்கின விநாயக ஜெயஜெய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜெயஜெய
தத்துவ மறைதெரி வித்தகா ஜெயஜெய
நன்நெறி விக்கின விநாயகா ஜெயஜெய
பள்ளியி லுறைதரும் பிள்ளாய் ஜெயஜெய
மன்று ளாடும் மணியே ஜெயஜெய
இயங்கிய ஞானக் குன்றே ஜெயஜெய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜெயஜெய
இலவக்கொம்பொன் றேந்தியே ஜெயஜெய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜெயஜெய
அழகிய ஆனைக் கன்றே ஜெயஜெய
இளமத யானை முகத்தாய் ஜெயஜெ ய
இரகுபதி விக்கின விநாயகா ஜெயஜெய

*ஆனந்தலோ டாதியி லடிதொழ வருளே.*
*பிள்ளையார் சிந்தனை முற்றிற்று.*

# 108 கணபதி போற்றி

அருள்மிகு முகனே அழகா போற்றி 1
அரனின் மகனே குழா போற்றி
ஆனை முகத்தவா அருளே போற்றி
ஆதி பரம்பொருள் ஆனாய் போற்றி
இகபர சுகமது அருள்வாய் போற்றி
உடுகுல பதியைக் கடிந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையின் சீர்பெறும் மைந்தா போற்றி
ஊரும் ஆகு வாகனா போற்றி
எழில்நடம் புரியும் இறைவா போற்றி
ஏரம் பனெனும் பொருளே போற்றி
ஐங்கர முடைய ஐயா போற்றி
ஒப்பிலா மணியே உயர்வே போற்றி
ஓரெழுத் தாகிய தாரக போற்றி
கணபதி யெனும்கண நாதா போற்றி
கரியுருக் கொண்டாய் கண்ணே போற்றி
காவிய பாரதம் வரைந்தாய் போற்றி
காவிரி தோன்றக் காரணா போற்றி
கைலையை ஔவைக் கீந்தாய் போற்றி

கரும்பினை விரும்பும் கண்ணே போற்றி
முப்பழ மதிரசம் கொள்வாய் போற்றி
அப்பம் அவல்பொரி விழைந்தாய் போற்றி
கைத்தலம் நிறைகனி யுடையாய் போற்றி
உத்தமி புதல்வா உறவே போற்றி
பந்த மனைத்தும் தகர்ப்பாய் போற்றி
தேரச்சது பொடிசெய் தீரா போற்றி
தீராப் பிணியும் தீர்ப்பாய் போற்றி
ஆராத இன்பம் அருள்வாய் போற்றி
பக்தருக் கருளும் பரமா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கரத்தவன் முதல்வா போற்றி
பாம்பணை யானின் மருகா போற்றி
சக்கரம் மாலுக் கீந்தாய் போற்றி
சடுதியில் வரமருள் இறைவா போற்றி
சுந்தர ரூபா சிறுவா போற்றி
சீதப் பனிமதி முடியாய் போற்றி
ஈசனின் மைந்தா உயிரே போற்றி
மூலப் பொருளே முதல்வா போற்றி
முக்கணான் மைந்தா பாலா போற்றி
தொப்பண குட்டு முகப்பாய் போற்றி

தற்பர சிற்ப சுகத்தாய் போற்றி
செம்ப வளக்குன் றனையாய் போற்றி
வேதமும் தாங்கும் பாதா போற்றி
நாதமும் கடந்து நிறைந்தாய் போற்றி
இன்னருள் புரியும் நின்னருள் போற்றி
என்னரும் பொருளே அரசே போற்றி
வல்லபக் கணேச குருவே போற்றி
திருவுங் கல்வியும் தருவாய் போற்றி
திருவடி பணிவோர்க் கருள்வாய் போற்றி
விளங்கு சித்தி விநாயகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்குழி விளங்கும் கண்ணே போற்றி 50
குருவும் தெய்வமும் ஆனாய் போற்றி
பரம்பினை நூலாய்க் கொண்டாய் போற்றி
பரம பதமதுன் பதமே போற்றி
அக்ஷ மாலையது கந்தாய் போற்றி
வல்லமை அனைத்தும் தருவாய் போற்றி
வாதாபி கணபதி நாதா போற்றி
வரமருள் தயாள குருவே போற்றி
வருத்தும் துயரது துடைப்பாய் போற்றி
வந்த வினையது போக்குவாய் போற்றி

நினைத்ததை முடிக்கும் நிமலா போற்றி 60
அறிவாய் ஒளிரும் நின்னுரு போற்றி
மாதுளை மாங்கனி உவந்தாய் போற்றி
என்றும் இளையாய் இறைவா போற்றி
அரக்கனைப் போரில் கொன்றாய் போற்றி
மங்களம் புரியும் மன்னா போற்றி
திங்களைக் கடிந்த பாலா போற்றி
வித்தக மருப்புடை பெரும போற்றி
மத்தள வயிறினை யுடையாய் போற்றி
உலகுக்கு உயிராய் நிறைந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ப்பதி மேவிய புண்ணியா போற்றி
சிற்றடி போற்றினேன் தலைவா போற்றி
கழலிணை சேர வருள்வாய் போற்றி
சம்புவின் குமார அமரா போற்றி
அறுகினை முடிமேல் அணிவோய் போற்றி
எருக்கினை விரும்பிச் சேர்ப்பாய் போற்றி
தும்பை துலங்கும் மார்பா போற்றி
அம்பை அருளிய சேயே போற்றி
கம்பை மேவும் கணபதி போற்றி
நம்பினார்க் கருள்புரி மூர்த்தியே போற்றி

திக்கெல்லாம் புகழ்பெறு தீரா போற்றி
தியான மூர்த்தியே வீரா போற்றி
மந்த்ர மூர்த்தியே மூலா போற்றி
தந்த்ர மூர்த்தியே தலைவா போற்றி
யந்த்ர மூர்த்தியே தேவா போற்றி
யாக மூர்த்தியே நாதா போற்றி
வேண்டுவ தருளும் வீரா போற்றி
வெற்றியை அருளும் கருணையே போற்றி
புத்தியை வளர்க்கும் புனிதா போற்றி
அத்தி முகத்தவா அருள்வாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு முகத்தனுக் கண்ணா போற்றி 90
மூவுல காளும் முதல்வா போற்றி
முக் குணங் கடந்த நாதா போற்றி
மூன்று கண்ணுடை இறைவன் போற்றி
கற்பகக் களிறே குருவே போற்றி
கற்பகக் களிறே குருவே போற்றி
நாலிரு புயத்தாய் நாயகா போற்றி
நாற்றிசை போற்றும் தலைவா போற்றி
நானற்ற விடமே நிற்பாய் போற்றி
அல்லல் களையும் அன்பே போற்றி

அஞ்சக் கரத்தின் பொருளே போற்றி 100
பூத மைந்தம் ஆனாய் போற்றி
வேத நான்கின் பொருளே போற்றி
நாத முடிவின் முடிவே போற்றி
முடிவும் வடிவும் இல்லாய் போற்றி
அடியும் முடியும் நீயே போற்றி
கடிமலர் பூசை ஏற்பாய் போற்றி
வடிவ மனைத்தும் ஆனாய் போற்றி
வேத முதல்வா விநாயகா போற்றி
வேத முகத்தரசே போற்றி செய் போற்றி 108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதர் அருளிச் செய்த

# முக்தி விநாயக அகவல்

பிரணவப் பொருளாம்
பெருந்தகையைங்கரன்
சரவணற்புதமலர் தலைக்கணிவோம்.

அரகர சிவ சிவ நமோ நமோ
ஆகு வாகனனே நமோ நமோ
இபமுகத் தோனே நமோ நமோ
ஈசுவரன் மகனே நமோ நமோ
உமையாள் சுதனே நமோ நமோ
ஊனிற் பெரியோய் நமோ நமோ
எமையாள் பவனே நமோ நமோ
ஏழை பங்காளாய் நமோ நமோ
ஐயா துய்யாய் நமோ நமோ
ஒற்றை மருப்பாய் நமோ நமோ
ஓதிய மறையே நமோ நமோ
ஔவைக் கினியாய் நமோ நமோ
அஃகரப் பொருளே நமோ நமோ
கணநா யகனே நமோ நமோ
கிருபைக் கடலே நமோ நமோ
கீதகிண் கினியாய் நமோ நமோ
குஞ்சரக் கன்றே நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறும் பரனே நமோ நமோ
கெதியளிப் பவனே நமோ நமோ
கேள்வி விலாசா நமோ நமோ
கையைந் தவனே நமோ நமோ
கொழுந்திடு முதலே நமோ நமோ
கோவே தேவே நமோ நமோ
கௌவைத் துணையே நமோ நமோ
சதுர்மறைப் பொருளே நமோ நமோ
சாய்மறைச் செவியாய் நமோ நமோ
சிவன் கண்மணியே நமோ நமோ
சீவ சஞ்சிதமே நமோ நமோ
சுருதி விளக்கே நமோ நமோ
சூர சங்காரா நமோ நமோ
ஜெய ஜெய விநாயகா நமோ நமோ
சேய்நூற் கரசே நமோ நமோ
சைவக் குருவே நமோ நமோ
சொல்லும் பொருளே நமோ நமோ
சோக விநாசா நமோ நமோ
சௌகரியக் களிரே நமோ நமோ
தண்டைக் காலாய் நமோ நமோ
தாமரைக் கரத்தாய் நமோ நமோ
திருமால் மருகா நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு தீர்ப்பவனே நமோ நமோ
தும்பிக் கையாய் நமோ நமோ
தூல சூக்குமத்தோய் நமோ நமோ
தெய்வ சிகாமணி நமோ நமோ
தேவர்கள் தேவே நமோ நமோ
தையல் வல்லபையாய் நமோ நமோ
தொண்டர்க் கிதமே நமோ நமோ
தோத்திரப் பிரியாய் நமோ நமோ
தௌவை தீர்ப்பவனே நமோ நமோ
நம்புந் துணையே நமோ நமோ
நாக பூஷணனே நமோ நமோ
நித்தன் மதலாய் நமோ நமோ
நீறணி பவனே நமோ நமோ
நுகருமா யமுதே நமோ நமோ
நூறாப் பேரே நமோ நமோ
நெற்றிக் கண்ணாய் நமோ நமோ
நேமியந் திரத்தாய் நமோ நமோ
நைவளத் துரந்தோய் நமோ நமோ
நொந்தார்க் காவாய் நமோ நமோ
நோய்தீர்ப் பவனே நமோ நமோ
நௌவி தர்த்தோய் நமோ நமோ
பதினோ ருகையாய் நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத விநாசா நமோ நமோ
பிணிக்கு மருந்தே நமோ நமோ
பீடை தீர்ப்பவனே நமோ நமோ
புத்தி தந்தவனே நமோ நமோ
பூமகள் மருகா நமோ நமோ
பெற்றோர் மகிழே நமோ நமோ
பேழை வயிற்றாய் நமோ நமோ
பையர வணிந்தாய் நமோ நமோ
பொன்றாக் குன்றே நமோ நமோ
போதப் பொருளே நமோ நமோ
பௌவ வணத்தோய் நமோ நமோ
மதியளிப் பவனே நமோ நமோ
மாதையில் வாழ்வே நமோ நமோ
மிகுதி யானவனே நமோ நமோ
மீதோர் வேந்தே நமோ நமோ
முக்கண் ணுடையாய் நமோ நமோ
மூவரின் முதலாய் நமோ நமோ
மெய்பொருட் கிரியே நமோ நமோ
மேலாம் பதமே நமோ நமோ
மைநிற மணியே நமோ நமோ
மொழிவார்க் கருளே நமோ நமோ
மோதகக் கையாய் நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மௌலி தரித்தோய் | நமோ நமோ |
| வல்லபை மணாளா | நமோ நமோ |
| வாமன ரூபா | நமோ நமோ |
| வித்தைக் கிறைவா | நமோ நமோ |
| வீரதண் டையனே | நமோ நமோ |
| உத்தம தேவே | நமோ நமோ |
| ஊனத் துறப்பாய் | நமோ நமோ |
| வெயிலவற் கினியாய் | நமோ நமோ |
| வேண்டிலி நாயகா | நமோ நமோ |
| வையம் புரந்தோய் | நமோ நமோ |
| வௌதர் பரனே | நமோ நமோ |
| ஒப்பிலா மணியே | நமோ நமோ |
| ஓம்பொரு ளாளா | நமோ நமோ |
| மகா கணபதியே | நமோ நமோ |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org